# "AN ANALYSIS OF PROBLEMS FACED BY FISHERMEN IN INCREASING THEIR PRODUCTION IN MUTHUR DIVISIONAL SECRETARI AT DIVISION"

LIBRARY
25 JUN 2006
Eastern University, Sri Lanka

By:
PONNAMPALAM PRABAKAR

873
FC 873
Project Report
Library - EUSL

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY, SRI LANKA
2004

ENGLISH

# பொருளடக்கம்


| பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- |
| நன்றியுரை | I-II |
| ஆய்வுச்சுருக்கம் | III |
| பொருளடக்கம் | IV |
| அட்டவணைகளின் பட்டியல் | V-VI |
| வரைபடங்களின் பட்டியல் | VII |
| அத்தியாயம் 1<br>ஆய்வு அறிமுகம் | 1-7 |
| அத்தியாயம் 2<br>நூலாய்வு | 8-40 |
| அத்தியாயம் 3<br>தரவுமுன்வைத்தல் | 41-70 |
| அத்தியாயம் 4<br>தரவுப்பகுப்பாய்வு | 71-80 |
| அத்தியாயம் 5<br>முடிவுரையும் சிபாரிசுகளும் | 81-91 |
| உசாத்துணை நூல்கள் | |
| பின்னிணைப்பு | |
| வினாக்கொத்து | |
| Basic Information of Fisheries in Trin Comalee District | |

## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் தொழில் துறையை பொறுத்தமட்டில் அவை பல்வேறுதுறைகளிலும் வளர்ச்சியடைந்த ஒன்றாகவே காணப்படுகின்றன. இதற்கென நவீன தொழில் நுட்பமும், அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போல் இல்லை. ஆயினும் ஓரளவு திருப்தியளிப்பதாகவே காணப்படுகின்றது.இருப்பினும் இது எவ்வளவு தூரம் நாட்டின் மூலை முடுக்கெங்கும் பரந்து காணப்படுகின்றது என்பது சிந்திக்கவேண்டிய ஒரு விடயமே. ஆனால் ஒரு நாடு மாற்றங்களுக்கு ஏற்ப தன்னையும் மாற்றிக்கொள்வதில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. இந்த மாற்றமானது நாட்டின் எல்லாப் பாகங்களிலும் நடைபெற வேண்டியது என்பதுடன் அது விசேடமாக கிராமப்புறங்களை கவனத்தில் கொள்வதாக அமைய வேண்டும். கிராமத்துறையினர் தொழில் துறை மீது செலுத்தப்படும் கவனமே அந்நாட்டின் சமத்துவத்திற்கு வழிவகுக்கும்.

அந்த வகையில் எனது ஆய்வானது "கற்பகதருவாகிய" கடல் வளங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. கடல் வளங்களானவை நாட்டிற்கு அழியாத வரப்பிரசாதமே. இதனை உரிய முறையில் திட்டமிட்டு பயன்படுத்தும் பட்சத்தில் அந்நாடு உச்சப்பயனடைய முடியும் என்பது உறுதியானதே. எனவே இதுவரை காலமும் அபிவிருத்தி செய்ய அரசு முற்படாத ஒரு இடமாக இவ் ஆய்விற்குரிய மூதூர் பிரதேசம் அமைந்து காணப்படுகின்றது.

இவ் ஆய்வானது மூதூர் பிரதேசத்தின் கடற்றொழில் உற்பத்தி நடவடிக்கையை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பதையும், கடற்றொழிலாளர்கள் என்ன பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர் என்பது பற்றியும், இலங்கையில் கடற்றொழில் மேற்கொள்ளப்படும் பிரிவுகள் எவை ,மீன் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதிப்போக்கு எவ்வாறு உள்ளது என்பது பற்றியும், பிரச்சினைகளுக்கான காரணங்களை கண்டறிவதற்கான ஆய்வானது எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது பற்றியும் அதற்கான தீர்வுகளாக எவற்றினை முன்வைக்கலாம் என்பது பற்றியுமாக ஐந்து அத்தியாயங்களை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் முதலாம் அத்தியாயமானது அறிமுகம், தெரிவிற்கான காரணம், அதன் நோக்கம், எண்ணக்கரு உருவாக்கம், ஆய்வானது மேற்கொள்ளப்படும் வழிகள், எடுகோள்கள், வரையறைகள் போன்றவற்றையும்,

இரண்டாம் அத்தியாயமானது நூலாய்வாக அமைந்து காணப்படுகிறது . நூலாய்வு என்பதனுள் இலங்கையின் மீன்பிடித்தொழிலும், அது எதிநோக்கும் பிரச்சினைகளும் என்னும் தலைப்பின் கீழ் ஆராயப்படுகிறது. அந்த வகையில் இலங்கையில் மீன் பிடிக்கைதொழில் மேற்கொள்ளப்படும் பிரிவுகள், இலங்கையின் மீன் இறக்குமதியும் ஏற்றுமதியும், தொழில்துறை எதர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் ஆரயப்படுகின்றன.

மூன்றாம் அத்தியாயமானது தரவு முன்வைத்தலாக அமைந்து காணப்படுகிறது. இதன்படி எண்ணக்கருவாக்கம், ஆய்வுமுறைமை,என்பன விரிவாக ஆராயப்படுகின்றன. ஆத்துடன் தரவானது எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது என்பது பற்றியும் அறியப்படுகின்றது.

நான்காம் அத்தியாயமானது தரவினை பகுப்பாய்வு செய்வதாக அமைந்து காணப்படுகின்றது. இதனுள் முதலாம் தர தரவுகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் முன்வைக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஐந்தாம் அத்தியாயமாதை முடிவுரைகளும் சிபாரிசுகளுமாக அமைகின்றது. இதனுள் ஆய்வின் மூலம் என்ன முடிவுக்கு வரப்பட்டுள்ளது என்பதனையும் அவற்றின் தீர்வுக்கான சிபாரிசுகள் போன்றனவும் முன்வைக்கப்பட்டு ஆய்வறிக்கையானது பின்னிணைப்புக்களையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.